# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க,
# பிரிவிடல் (திருத்தம்) சட்டம்

---

[1987, ஜூன் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1987, யூன் மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 — தபாற் செலவு : சதம் 75

## 1987 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பிரிவிடல் (திருத்தம்) சட்டம்

[1987 ஜூன் 25 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 40/86

1841

### 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கப் பிரிவிடற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கப் பிரிவிடற் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிரிவிடற் சட்டத்தின் 16 ஆம் பிரிவானது, அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நில அளவையாளர் ஒருவருக்கு ஆணையொன்றை வழங்குமாறு நீதிமன்றம் கட்டளையிடுகின்றவிடத்து, நீதிமன்றமானது அத்துடன் சேர்த்து, வழக்கு தொடர்புபடுத்துகின்ற காணிக்கான உரிமைக் கோரிக்கை எதனையும் அளப்பனவு நேரத்தில் செய்யக்கூடியவர்களான (வழக்குக்கான கட்சிக்காரர் ஒருவர் அல்லாத) எவரேனும் ஆளிடம் அல்லது முகவரிடம் சேர்ப்பிக்கப்படுவதற்கென, சூழ்நிலைகளில் அது போதுமானதெனக் கருதக்கூடியவாறாக அறிவித்தலொன்றின் அத்தகைய எண்ணிக்கையான பிரதிகளை பொருளளவில் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான அவற்றின் மொழிபெயர்ப்புகளுடன் அத்தகைய நில அளவையாளருக்கு வழங்குமாறும் கட்டளையிடுதல் வேண்டும்.

(4) நில அளவையாளர், அளப்பனவின்போது உரிமைக்கோரிக்கையெதனையும் செய்கின்றவரான வழக்கின் கட்சிக்காரர் ஒருவர் அல்லாத அத்தகைய ஆளுக்கு அல்லது அவரது முகவருக்கு இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அறிவித்தலின் பிரதியையும் அவரது மொழியானது நீதிமன்ற மொழியல்லாததாயிருப்பின் அத்தகைய ஆளின் அல்லது அவரின் முகவரினது மொழியிலான அதன் மொழிபெயர்ப்பையும் நேரடியாகச் சமர்ப்பிப்பதன்மூலம் அத்தகைய பிரதியை அத்தகைய ஆளிடம் அல்லது அவரது முகவரிடம் சேர்ப்பித்தல் வேண்டும்.

(5) எவ்வாளுக்கு இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்படுகின்றதோ அவ்வாளுக்கு அல்லது அவரது முகவருக்கு அத்தகைய அறிவித்தல் கிடைத்ததென்பதற்கான ஒப்புக்கொள்ளலை அத்தகைய ஆளினது அல்லது அவரது முகவரினது கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம் மூலமும் அத்துடன் அத்தகைய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியுடனும் நில அளவையாளரானவர் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் எவ்வாளுக்கு அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்டதோ, அவ்வாளானவர், வழக்கில் எதிராளியாகப் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுமிடத்து, அத்தகைய ஆளுக்கு அல்லது அவரின் முகவருக்கு, இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் நில அளவையாளரினால் சேர்ப்பிக்கப்படுகின்ற அறிவித்தலானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய வழக்கில் அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அழைப்புக்கட்டளையெனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆளுக்கு வேறு அழைப்புக் கட்டளையெதுவும் சேர்ப்பிக்கவேண்டிய அவசியமும் இல்லாதிருத்தல் வேண்டும்.".

முதன்மை சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iv) என்னும் உட்பந்தியில் " ஏதேனும் கோரிக்கையினைச் செய்துள்ள எவரேனும் ஆளினது பெயர், முகவரி, அவரது கோரிக்கையின் தன்மை என்பன," என்னும் சொற்களுக்குப் பதிலாக, " ஏதேனும் கோரிக்கையினைச் செய்துள்ள எவரேனும் ஆளினது பெயர், முகவரி, அத்தகைய கோரிக்கையின் தன்மை, 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்ட அறிவித்தலானது சேர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற தேதி என்பன ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

" (ஈ) பதினாறும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்டுள்ள ஆளெவருக்கும் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தல் கிடைக்கப்பெற்றதென்பதற்கான ஒப்புக்கொள்ளலும் அத்தகைய அறிவித்தலின் எஞ்சியிருக்கும் பிரதிகளும் மொழிபெயர்ப்புக்களும்."

முதன்மை சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது "பிரிவிடல் வழக்கிற்கான ஒரு கட்சிக்காரராகப் பிராதில் பெயர் குறிப்பிடப்பட்ட அல்லது பிரிவிடல் வழக்கில் ஒரு கட்சிக்காரராகச் சேர்க்கப்பட விரும்புகின்ற ஒவ்வோர் ஆளும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " பிரிவிடல் வழக்கிற்கான ஒரு கட்சிக்காரராகப் பிராதில் பெயர்குறிப்பிடப்பட்ட அல்லது எதிராளி ஒருவராகப் பிராதில் சேர்க்கப்பட்ட அல்லது சேர்க்கப்பட விரும்புகின்ற ஒவ்வோர் ஆளும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மை சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) பதினாறும் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்டதான "பூர்வாங்க அளப்பனவுக்கான ஆணை" என்று தலைப்பிடப்பட்ட படிவத்தில், "உமது கட்டணங்களாக ரூபா.........................கொண்ட தொகை நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளது. 19......... ஆம் ஆண்டு..................... மாதம்............ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது" என்னும் எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :—

"அளப்பனவு நேரத்தில் காணிக்கான கோரிக்கை எதனையும் செய்யக்கூடியவரான (வழக்கில் கட்சிக்காரர் ஒருவர் அல்லாத) எவரேனும் ஆளுக்கு அல்லது அவரது முகவருக்கு 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் அறிவித்தலின் பிரதியைச் சேர்ப்பிக்குமாறு நீர் இத்தால் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

உமது கட்டணமாக..................... ரூபா பணத்தொகை பொன்று நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்டிருக்கிறது. அடுத்து இந்த வழக்கானது, .............. ஆம் ஆண்டு............ மாதம் ............ ஆம் நாளன்று திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்படும். 19............ஆம் ஆண்டு ............மாதம் ............ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.";

(2) பதினாறும் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்டதான "பூர்வாங்க அளப்பனவுக்கான ஆணை" என்ற தலைப்பைக்கொண்ட படிவத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய படிவத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"கோரிக்கை செய்பவருக்கு அல்லது முகவருக்கு நில அளவையாளரினால் சேர்ப்பிக்கப்படவேண்டிய அறிவித்தலின் படிவம்.

(பிரிவு) 16 (3)

..................... மாவட்ட நீதிமன்றத்தில்.

வழக்கு இல............................

அ. ஆ ..................... வழக்காளி.

எதிர்

இ. ஈ.............................. எதிராளிகளும்

..................................எனையோரும்.

..............................என்பவருக்கு.

(கோரிக்கை செய்பவரின் அல்லது முகவரின் பெயரை உட்புகுத்துக)

................. மாவட்டத்திலுள்ள ..................... என்னும் கிராமத்தில்/கிராமங்களில் அமைந்துள்ள ................. என அழைக்கப்படும் காணியை/காணிகளை பிரிவிடுவதற்காக/விற்பதற்காக 1987 ஆம் ஆண்

டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கப் பிரிவிடற் சட்டத்தின்கீழ் ......... மாவட்ட நீதிமன்றத்தில் ............... ஆம் இலக்க வழக்குத் தொடரப் பட்டுள்ளதென உமக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

காணியில்/காணிகளில் அக்கறை எதனையும் நீர் கோரினால், 19............... ஆம் ஆண்டு ...................... மாதம் ............ ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், மேற்கூறப்பட்ட வழக்கில் கட்சிக் காரர் ஒருவராகச் சேர்க்கப்படுவதற்கு பிரேரணையொன்றைச் சமர்ப் பிக்குமாறும் உமது கோரிக்கைக் கூற்றைக் கோப்பிடுமாறும் 19 ஆம் பிரி வின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுமாறும் நீர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர். அடுத்து இவ்வழக்கானது 19...........ஆம் ஆண்டு ............... மாதம் ............... ஆம் நாளன்று திறந்த நீதிமன் றத்தில் அழைக்கப்படும்.

ஒப்பம் .........................

ஆணையாளர்.

............... ஆம் ஆண்டு ............... மாதம் ............ ஆம் நாளாகிய இன்று";

(3) 18 (1) (அ) என்னும் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்டதான "நில அளவையாளரின் அறிக்கைப்படிவம்" என்ற தலைப்பைக் கொண்ட படிவத்தில் அதன் (viii) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன்மூலமும்:—

(viii) (வழக்கிற்குக் கட்சிக்காரர்களல்லாத) கோரிக்கை செய் கின்ற ஆட்கள், அவர்களின் முகவரிகள், கோரிக்கைகளின் தன்மை அத்துடன் அவர்களுக்கு அறிவித்தல் சேர்ப்பிக் கப்பட்ட தேதி ;".